செய்தி வெளியீடு எண்: 24 நாள்:08.09.2021.

**தேனி மாவட்டம்**
**கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்:-**

**********

தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிகள் குறித்து இன்று (08.09.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் வகுப்பு அறைகளுக்கு சென்று மாணவ, மாணவியர்களின் வருகை, வாசிப்புத்திறன், எழுத்துத்திறன், நினைவாற்றல் ஆகியவை குறித்தும், மாணக்கர்கள் மற்றும் ஆசிரியர்களிடமும், ஆசிரியர்களின் வருகை பதிவேட்டினை பார்வையிட்டு, வருகை தந்துள்ள ஆசிரியர்கள், விடுப்பில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆகியன தொடர்பாக தலைமையாசிரியரிடம் கேட்டறிந்தார். பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகின்ற சத்துணவு கூடம், மின்வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள், வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ஒவ்வொரு வகுப்பு அறைகளுக்கும் சென்று மாணவ, மாணவியர்களிடம், வருகின்ற 12.09.2021 அன்று அனைத்துப் பகுதிகளிலும் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெறவுள்ளதாகவும், கொரோனா தடுப்பூசி செலுத்துவதன் மூலம் மட்டுமே நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்திட முடியும் எனவும், எனவே, மாணவ, மாணவியர்கள் தங்களது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் 18-வயதிற்கு மேற்பட்ட இதுவரை தடுப்பூசி செலுத்தி கொள்ளாத அனைவரிடமும், இந்த மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் குறித்து எடுத்துரைத்து, அனைவரையும் தடுப்பூசி போடுவதற்கான விழிப்புணர்வை மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் ஏற்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, கொடுவிலார்பட்டியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் எண்ணிக்கை, குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் ஊட்டச்சத்து மாவு, பயர் வகைகள், மையத்தில் உள்ள விளையாட்டு பொருட்கள் ஆகிய குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம், காமராஜர் பேருந்து நிலையம், நேரு சிலை ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு,

இவ்விடங்களில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுவதற்கு அமைக்கப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளில் கொரோனாவிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்ள தடுப்பூசி ஒன்றே பேராயுதம் ஆகும். மேலும், தமிழக அரசின் உத்தரவின்படி, நமது தேனி மாவட்டத்தில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 12.09.2021 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் 400 இடங்களில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, இந்த நல்லவாய்ப்பினை பயன்படுத்தி, இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 18-வயதிற்கு மேற்பட்ட நமது மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசியினை செலுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் டாக்டர் ஆர்.தண்டபானி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அண்ணாதுரை உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**